மேனிலை இரண்டாம் ஆண்டு

கணக்குப்பதிவியல்

மாதிரி வினாத்தாள் – 1

நேரம் : 2.30 மணி மதிப்பெண்கள்: 90

பிரிவு – I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **(20 X 1=20)**

1. வெளித்திருப்பம் கழிக்கப்படுவது __________

(அ) கொள்முதல் (ஆ) விற்பனை (இ) மொத்த இலாபம்

2. நிறுவனத்தின் நிதி நிலையை அறிய உதவுவது __________

(அ) வியாபார இலாப நட்டக் கணக்கு (ஆ) இருப்பாய்வு (இ) முதல் கணக்குகள்

3. கொடுபட வேண்டிய வாடகை ஒரு __________

(அ) பொறுப்பு (ஆ) சொத்து (இ) வருமானம்

4. நிகர மதிப்பு முறையில், இலாபம் கண்டறிவதற்கான அடிப்படை வேறுபாடு__________

(அ) இரு தேதிகளில் உள்ள முதல் (ஆ) இரு தேதிகளில் உள்ள சொத்துகள்

(இ) இரு தேதிகளில் உள்ள பொறுப்புகள்

5. ஒரு நிறுவனத்தின் முதல் ரூ. 60.000 பொறுப்புகள் ரூ. 40,000 அந்நிறுவனத்தின் சொத்துகள்_______ஆகும்.

(அ) ரூ. 1,00,000 (அ) ரூ. 20,000 (இ) ரூ. 40,000

6. விற்பனை விலை சொத்தின் ஏட்டு மதிப்பைவிடக் குறைவாக இருந்தால் அது ஒரு __________

(அ) இலாபம் (ஆ) நட்டம் (இ) செலவு

7. சொத்தின் மதிப்பு ரூ. 5,00,000. 10% குறைந்த செல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டால் இரண்டாம் ஆண்டு இறுதியில் அச்சொத்தின் ஏட்டு மதிப்பு

(அ) ரூ. 4,05,000 (ஆ) ரூ. 4,00,000 (இ) ரூ.95,000

8. இயந்திரத்தின் மதிப்பிலிருந்து நீக்கப்பட்ட தேய்மானத் தொகை பற்று செய்யப்படும் கணக்கு __________

(அ) இயந்திரக் கணக்கு (அ) தேய்மானக் கணக்கு (இ) ரொக்கக் கணக்கு

9. தொடக்கச் சரக்கிருப்பு ரூ. 20,000 கொள்முதல் ரூ. 4,00,000 மற்றும் இறுதிச் சரக்கிருப்பு ரூ. 10,000 விற்ற பொருளின் அடக்கவிலை _____

(அ) ரூ. 4,30,000 (ஆ) ரூ. 4,20,000 (இ) ரூ. 4,10,000

10. பங்குதாரர் நிதியில் உள்ளடங்கியது

(அ) சாதாரணப் பங்கு முதல், முன்னுரிமை பங்குமுதல் மற்றும் காப்பும், மிகுதியும்

(ஆ) வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்

(இ) சாதாரணப் பங்குமுதல், முன்னுரிமை பங்குமுதல், காப்பும் மிகுதியும் மற்றும் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்

11. கடனீட்டுப் பத்திரங்களை மீட்டல், உதாரணமாக அமைவது __________

(அ) ரொக்கப் பெறுதல்கள் (ஆ) ரொக்கச் செலுத்தல்கள்

(இ) ரொக்கப் பெறுதல் மற்றும் செலுத்தல்

12. திட்டப்பட்டியல் வெளிப்படுத்துவது

(அ) பணம் (ஆ) அலகுகளின் எண்ணிக்கை

(இ) பணம் மற்றும் அலகுகளின் எண்ணிக்கை

13. ஒரு நிறுவனத்தில் A,B ஆகிய கூட்டாளிகளின் முதல் கணக்குகள் மற்றும் நடப்புக் கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன. B கொண்டுவரும் கூடுதல் முதல் பதியப்படுவது

(அ) B யின் நடப்புக் கணக்கு (ஆ) B யின் முதல் கணக்கு

(இ) B யின் முதல் கணக்கு அல்லது நடப்புக் கணக்கு

14. ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் ஒரு குறிப்பிட்ட தொகை எடுக்கும்பொழுது, எடுப்பு மீதான வட்டிக்கு உரிய காலத்தைக் கண்டறிக.

(அ) $\frac{11}{24}$ (ஆ) $\frac{12}{24}$ (இ) $\frac{13}{24}$

15. மறுமதிப்பீட்டு கணக்கு என்பது

(அ) சொத்து கணக்கு (ஆ) பெயறளவு கணக்கு (இ) ஆள்சார் கணக்கு

16. கூட்டாளிகள் A,B இருவரும் **3: 2** என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். புதிய கூட்டாளி C 1/5 பங்கிற்குச் சேர்க்கப்பட்டார். A,B ஆகியோர் C யின் பங்கிற்காகத் தருவது

(அ) சமமாக (ஆ) அவர்களின் இலாபம் பகிர்வு விகிதத்தில்

(இ) அவர்களின் முதல் விகிதத்தில்

17. வெளிச் செல்லும் கூட்டாளிக்கு சேர வேண்டிய தொகை உடனே செலுத்தப்படவில்லை எனில், அத்தொகை மாற்றப்படும் கணக்கு

(அ) முதல் கணக்கு (ஆ) கடன் கணக்கு (இ) தியாகம்

18. புதிய இலாபப் பகிர்வு விகிதத்திலிருந்து பழைய இலாபப் பங்கு விகிதத்தைக் கழித்தால் கிடைப்பது__________விகிதம் ஆகும்

(அ) ஆதாயம் (அ) முதல் (இ) ரொக்க கணக்கு

19. பத்திர முனைமக் கணக்கில் உள்ள தொகையை எந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம்

(அ) வெளியிடாத பங்குகள் மற்றும் செலுத்தப்பட்ட மேல் ஊதியப் பங்குகளாக வழங்க

(ஆ) இலாபம் பகிர்வதற்கு

(இ) பொதுக் காப்பு கணக்கிற்கு மாற்றுதல்

20. ஒரு நிறுமம் விடுக்கக் கூடிய அதிகபட்ச அழைப்புகளின் எண்ணிக்கை

(அ) ஒன்றாகும் (ஆ) இரண்டாகும் (இ) மூன்றாகும்

## பிரிவு – II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 21 – க்குக் கண்டிப்பாக விடையளிக்கவும்** (7X2=14)

21. கூடியுள்ள வருமானம் என்றால் என்ன ?

22. ஒற்றைப்பதிவு முறை வரைவிலக்கணம் தருக.

23. காலப்போக்கு பற்றிக் குறிப்பு வரைக.

24. நீர்மைச் சொத்துக்கள் அல்லாத ஏதேனும் இரண்டு நடப்புச் சொத்துகளைக் கூறுக.

25.

| | மே | ஜுன் | ஜுலை |
|---|---|---|---|
| ரொக்க விற்பனை | 1,37,500 | 1,62,500 | 2,37,500 |
| கடன் விற்பனை | 1,37,500 | 1,72,500 | 2,00,000 |

குறிப்பு: வாடிக்கையாளருக்கு அளித்த கடன் வசதி காலம் ஒரு மாதம். ஜுன் மற்றும் ஜுலை மாதத்திற்கு வாடிக்கையாளரிடம் பெற வேண்டிய ரொக்கப் பெறுதல்களைக் காண்க.

26. ஒரு நிறுவனத்தின் "சிறந்த மேலாண்மை," எவ்வாறு நற்பெயரை பாதிக்கு காரணியாக அமைகிறது ?

27. கூட்டாண்மை ஒப்பாவனத்தில் எடுப்பு மீது வ ட் டி குறிப்பிடப்படவில்லை என்றால், எடுப்பு மீது வட்டி அனுமதிக்கலாம் ? ஆம் என்றால் , எவ்வளவு சதவீதம் ? இல்லையென்றால் ஏன் ?

28. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் ஒரு புதிய கூட்டாளியைச் சேர்ப்பதற்கான ஏதேனும் இரண்டு காரணங்களைக் கூறு.

29. ஆதாய விகிதம் என்றால் என்ன ?

30. மிகை ஒப்பம் என்றால் என்ன ?

## பிரிவு – III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண் 31 – க்க கண்டிப்பாக விடையளிக்கவும்** (7X 3=21)

31. இயந்திரம் மீது தேய்மானம் ரூ. 25,000. சரிக்கட்டுப்பதிவு மற்றும் மாற்றுப்பதிவு தருக.

32. விடுபட்ட தகவலைக் காண்க.

| | ரூ. |
|---|---|
| இறுதி முதல் | 1,60,000 |
| தொடக்க முதல் | 1,20,000 |
| அவ்வாண்டிற்குரிய இலாபம் | 64,000 |
| கூடுதல் முதல் | 20.000 |
| எடுப்பு | ? |

33. நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க.

| | |
|---|---|
| இயந்திரத்தின் அடக்கவிலை | ரூ. 2,30,000 |
| நிறுவுவதற்கான செலவுகள் | ரூ. 20,000 |
| பயனளிப்புக் காலம் | 10 ஆண்டுகள் |
| எறி மதிப்பு | ரூ. 50,000 |

34. மொத்த இலாப விகிதத்தைக் காண்க.

| | |
|---|---|
| விற்பனை | ரூ. 6,50,000 |
| விற்ற பொருளின் அடக்கவிலை | ரூ. 4,80,000 |
| விற்பனைத் திருப்பம் | ரூ. 50,000 |

35. திட்டப்பட்டியலுக்கான தன்மைகள் யாவை ?

36. X மற்றும் Y எனும் கூட்டாளிகள் சமமாக இலாப நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். X என்பவர் ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் ரூ.3,000 முறையாக ஆண்டு முழுவதும் திரும்ப எடுக்கிறார். Y என்பவர் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூ. 2,000 ஆண்டு முழுவதும் திரும்ப எடுக்கிறார். ஆண்டுக்கு 10 % வீதம் எடுப்புகள் மீதான வட்டியைக் கணக்கிடுக.

37. நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ? (ஏதேனும் 3)

38. ரவி, ராஜா என்ற கூட்டாளிகள் முறையே 7: 3 எனும் விதிதத்தில் இலாபம் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் ராஜேஷ் என்பவரை 1/5 பங்குக்கு இருவரும் சமமாகத் தியாகம் செய்து சேர்த்தனர். அவர்களுடைய புதிய இலாபப் பகிர்வு விகிதத்தைக் கணக்கிடுக.

39. வரையறு நிறுமம் ஒன்று ரூ.10 மதிப்புடைய 5,00,000 பங்குகளை ரூ. 5 முனைமத்தில் வெளியிட்டது. அனுகூலமான சந்தை நிலவரத்தால் கூடுதலாக விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இயக்குனரவைக்குப் பங்கு ஒதுக்கீடு செய்ய மாற்று வழியினைக் கூறுக.

40. வினோத் வரையறு நிறுமம் ரூ.10 வீதம் 40,000 முன்னுரிமைப் பங்குகளை ரூ.3 முனைமத்தில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

பிரிவு – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (7X 5=35)

41. (அ) 31.3.2007 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.52,000.

சரிக்கட்டுதல்கள் :

1. வாராக்கடன் ரூ.2,000. போக்கெழுதுக.

2. பற்பல கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.

3. கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.

சரிக்கட்டுப் பதிவுகள் தந்து இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

(அல்லது)

(ஆ) திரு சுரேஷ் ஒற்றைப் பதிவு முறையில் தனது கணக்கேடுகளைப் பராமரித்து வருகிறார். அவர் 01.04.2007 அன்று ரூ. 1,00,000 முதலுடன் தொழில் தொடங்கினார். 30.03.2008 அன்று அவருடைய நிலை கீழ்க்காணுமாறு இருந்தது.

| | ரூ. |
|---|---|
| வங்கி இருப்பு | ரூ. 20,000 |
| சரக்கிருப்பு | ரூ. 30,000 |
| பற்பல கடனாளிகள் | ரூ. 70,000 |
| இயந்திரம் | ரூ. 50,000 |
| கை ரொக்கம் | ரூ. 10,000 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | ரூ. 30,000 |
| பற்பல கடனீந்தோர் | ரூ. 40,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டுகள் | ரூ. 20,000 |
| கொடுபட வேண்டிய செலவுகள் | ரூ. 5,000 |

அவர் அவ்வாண்டில் ரூ. 35,000 கூடுதல் முதல் இட்டார். அவர் தனது சொந்தச் செலவுக்காக ஒவ்வொரு மாதமும் ரூ. 2,000 வீதம் திரும்ப எடுத்துக் கொண்டார். 2007–2008 ஆம் ஆண்டிற்கான அவரது இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

42 (அ) கீழ்க்காணும் இருப்பாய்வுலிருந்து திரு. கவின் அவர்களின் 2004 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாபநட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க.

2004,மார்ச் 31ஆம் நாளைய இருப்பாய்வு

| பற்று இருப்புகள் | ரூ. | வரவு இருப்புகள் | ரூ. |
|---|---|---|---|
| எடுப்புகள | 16,000 | முதல் | 1,20,000 |
| கை ரொக்கம் | 2,500 | கழிவு | 11,000 |
| சரக்கிரப்பு (1.4.2003) | 1,00,000 | வங்கி மேல்வரைப்பற்று | 8,500 |
| கொள் முதல் | 3,00,000 | விற்பனை | 4,20,000 |
| கூலி | 50,000 | பற்பல கடனீந்தோர் | 50,000 |
| காப்பீட்டுமுனைமம் | 1,000 | பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 25,000 |
| சம்பளம் | 15,000 | | |
| பற்பல கடனாளிகள் | 1,50,000 | | |
| | 6,34,500 | | 6,34,500 |

சரிக்கட்டுதல்கள் :

1. இறுதிச் சரக்கிருப்பு ரூ.1,00,000.

2. கொடுபட வேண்டிய கூலி ரூ.2,000.

3. கூடியுள்ள கழிவு இன்னமும் பெறப்படாதது ரூ. 1,000.

4. காலாண்டிற்கான காப்பீட்டு முனைமம் முன்கூட்டிச் செலுத்தப்பட்டது.

(அல்லது)

(ஆ) கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு, ரவி, ராஜா எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளை மாறுபடும் முதல் முறையில் தயாரிக்க

| விவரம் | ரவி | ராஜா |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1.1.2001 அன்றைய முதல் | 80,000 | 50,000 |
| 2001 ஆம் ஆண்டில் எடுப்புகள் | 6,000 | 4,000 |
| முதல் மீது வட்டி 6 % | ? | ? |
| எடுப்பு மீது வட்டி 5% | ? | ? |
| 2001 ஆம் ஆண்டின் இலாபப்பங்கு | 8,000 | 6,000 |
| கூட்டாளியின் ஊதியம் | 4,000 | 2,000 |
| கழிவு | 1,600 | 1,200 |
| ராஜாவின் கடன் மீது வட்டி | 4,000 | 3,000 |

43.(அ) திரு ரவி அவர்களின் ஏடுகள் 2000 ஏப்ரல் 1 அன்று காட்டும் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பொறுப்புகள் | தொகை ரூ. | சொத்துகள் ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|
| முதல் | 83,030 | நற்பெயர் | 18,540 |
| பற்பல கடனீந்தோர் | 9,010 | அறைகலன் | 14,010 |
| | | பற்பல கடனாளிகள் | 46,830 |
| | | வங்கி ரொக்கம் | 12,660 |
| | 92,040 | | 92,040 |

பிற தகவல்கள்:

| | |
|---|---|
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,12,460 |
| எடுப்புகள் | 81,600 |
| சம்பளம் கொடுத்தது | 18,300 |
| வாடகை கொடுத்தது | 9,450 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்தது | 90,360 |
| பல்வகைச் செலவுகள் செலுத்தியது | 3,840 |
| சரக்கிருப்பு(31.3.2001) | 32,000 |
| பற்பல கடனாளிகள்(31.3.2001) | 56,700 |
| பற்பல கடனீந்தோர்(31.3.2001) | 16,000 |
| வங்கி ரொக்கம் (31.3.2001) | 21,570 |

2001 மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாப நட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க.

(அல்லது)

(ஆ) மாலா, கீதா என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் லதா என்பவரை கூட்டாண்மையில் சேர்க்க முடிவு செய்து சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்தனர்.

(அ) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள முதலீடுகள் ரூ. 12,000 தற்போழுது பதிவு செய்தல் வேண்டும்.

(ஆ) சரக்கிருப்பு, அறைகலன் மற்றும் எந்திரத்தின் மதிப்புகளை முறையே ரூ. 3,000, ரூ. 1,000, ரூ. 5,000 என குறைக்க வேண்டும்.

(இ) கொடுபடாமலுள்ள பொறுப்புகளுக்கு ரூ. 4,000 க்கு வகை செய்ய வேண்டும். குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீடு கணக்கு தயார் செய்யவும்.

44. (அ) நவீன்,நிதின் என்ற கூட்டாளிகள் 7:5 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர் அவர்களின் 2004 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு பின் வருமாறு.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 40,000 | வங்கி | 52,000 |
| பொதுக்காப்பு | 72,000 | பற்பல கடனாளிகள் | 40,000 |
| தொழிலாளி ஈட்டுத்தொகை நிதி | 60,000 | சரக்கிருப்பு | 72,000 |
| முதல் கணக்குகள்: | | இயந்திரம் | 1,60,000 |
| நவீன் 1,20,000 | | இலாபநட்டகணக்கு | 48,000 |
| நிதின் 80,000 | 2,00,000 | | |
| | 3,72,000 | | 3,72,000 |

2005 ஜனவரி 1 ஆம் நாள் நிதின் கூட்டாண்மையிலிருந்து விலகினார். பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நவீன் என்பவர் நிறுவனத்தை எடுத்துக் கொண்டார்.

(அ) நிறுவனத்தின் நற்பெயர் ரூ.36,000 என மதிப்பீடு செய்யப்பட்டது.

(ஆ) இயந்திரம் மீது தேய்மானம் 10% நீக்கப்பட்டது.

(இ) பற்பல கடனாளிகள் மீது 5% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்பட்டது.

(ஈ) தொழிலாளர் ஈட்டுத்தொகை நிதிப் பொறுப்பு ரூ.36,000 என மதிப்பிடப்பட்டது.

மறுமதிப்பீட்டுக் க/கு, முதல் கணக்குகள் மற்றும் நவீனின் இருப்புநிலைக்குறிப்பு ஆகியவற்றைத் தயார் செய்க.

(அல்லது)

ஆ) பின்வரும் விவரங்களைக் கொண்டு நீர்மை விகிதங்களைக் கணக்கிடுக.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| கடனாளிகள் | 5,000 | கடனீந்தோர் | 4,000 |
| கையிருப்பு ரொக்கம் | 4,000 | செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 3,000 |
| வங்கியில் ரொக்கம் | 6,000 | கொடுபட வேண்டிய செலவினங்களள் | 250 |
| குறுகிய கால முதலீடுகள் | 2,000 | பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 3,000 |
| முன்கூட்டிச் செலுத்த வேண்டிய செலவினங்கள் | 1,000 | இறுதிச் சரக்கிருப்பு | 8,000 |

45. (அ) சுனிதா வரையறு நிறுமம் பங்கொன்று ரூ.10 வீதம் 1,000 பங்குகளை ரூ. 12 க்கு வெளியிட்டது. தொகை பின்வருமாறு செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பத்தின் போது ரூ.3

ஒதுக்கீட்டின் போது ரூ.5 (முனைமம்

சேர்த்து) முதன் அழைப்பின் போது ரூ. 2

இறுதி அழைப்பின் போது ரூ. 2

1. நிறுமம் இறுதி அழைப்பை விடுக்கவில்லை. மணி அவர்களுக்கு 25 பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. பின்வரும் நிலையில் ஒறுப்பிழப்பு தொடர்பான குறிப்பேட்டு பதிவுகளைத் தருக.
   மணி, முதல் அழைப்பு தொகை செலுத்தத் தவறி, அவரது பங்குகள ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.

2. நிறுமம் அனைத்து அழைப்புகளையும் விடுத்தது மணி, முதல் அழைப்பு மற்றும் இறுதி அழைப்புத் தொகை செலுத்தத் தவறியதால், அவரது பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. குறிப்பேட்டு பதிவுகளைத் தருக

(அல்லது)

(ஆ) 2001 ஏப்ரல் 1 அன்று ரூ.40,000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கப்பட்டது. 2003 அக்டோபர் 1, அன்று

ரூ.48,000 மதிப்புள்ள புதிய இயந்திரம் வாங்கப்பட்டது. 2003 செப்டம்பர் 30 அன்று, 2001 ஏப்ரல்1 னில் ரூ.40,000 மதிப்புள்ள இயந்திரம் வழக்கொழிவு காரணமாக ரூ. 24,000 க்கு விற்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் மார்ச் 31 ல் முடிக்கபெறுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் தேய்மானம் 10% குறைந்து செல் மதிப்பு முறையில் நீக்கப்பட்டது. முதல் முன்று ஆண்டுகளுக்கு இயந்திரக் கணக்கு தயாரிக்கவும்.

46. (அ) பின்வரும் விவரங்களிலிருந்து 2004 ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களுக்கான ரொக்கத் திட்டப்பட்டியலை தயாரிக்க.

| விவரம் | ஜுலை<br>ரூ | ஆகஸ்ட்<br>ரூ | செப்டம்பர்<br>ரூ. |
|---|---|---|---|
| ரெக்கக்கொள்முதல் | 2,00,000 | 4,00,000 | 6,00,000 |
| ரெக்க விற்பனை | 5,50,000 | 6,50,000 | 9,50,000 |
| கடன் கொள்முதல் | 2,90,000 | 4,90,000 | 6,50,000 |
| கடன் விற்பனை | 5,50,000 | 6,90,000 | 8,00,000 |
| செலவுகள் | 1,00,000 | 1,20,000 | 1,40,000 |

1. ஆகஸ்ட் 1 ல் எதிர்நோக்கும் தொடக்க ரொக்க இருப்பு ரூ. 1,60,000.
2. சரக்களித்தோர் அனுமதித்த மற்றும் வாடிக்கையாளருக்கு அளித்த கடன் வசதி காலம் ஒரு மாதம்.
3. செலவுகள் அம்மாதத்திலேயே செலுத்தப்பட வேண்டும்.
4. ஆகஸ்டில் பெறவேண்டிய பங்காதயம் ரூ. 32,000.
5. செப்டம்பரில் செலுத்தப்பட வேண்டிய கழிவு ரூ. 5,40,000.

(அல்லது)

(ஆ) A,B என்ற கூட்டாளிகள முறையே ரூ.50,000, ரூ.40,000 முதல் வைத்து 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிரிந்து வருகின்றனர். முதல் மீது வட்டி ஆண்டுக்கு 8% வழங்க ஒப்புக் கொண்டுள்ளனர். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 10% நிர்ணயித்துள்ளனர். எடுப்பு தொகை முறையே ரூ.15,000, ரூ.10,000. ஆகும் A க்கு ரூ.12,000 ஊதியமாகவும், B க்கு கழிவுக்கு முன் நிகர இலாபத்தில் 10% கழிவாகவும் பெறுகின்றனர். மேற்கண்ட சரிக்கட்டுதல்களுக்கு முன் தொழிலின் 2005 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நிகர இலாபம் ரூ.60,000.

இலாப நட்டப் பகிர்வுக் கணக்கைத் தயாரிக்க.

47. சன் வரையறு நிறுமம் பங்கொன்று ரூ.10 முகமதிப்புடைய 20,000 பங்குகளை ரூ.2.50 முனைமத்தில் பின்வரும் நிபந்தனைகளோடு வெளியிட்டது.

| | |
|---|---|
| விண்ணபத்தின் போது | ரூ.2.50 |
| ஒதுக்கீட்டின் போது | ரூ. 5 (முனையம் உட்பட) |
| முதலாவது அழைப்பின்போது | ரூ. 3 |
| இறுதி அழைப்பின்போது | ரூ. 2 |

30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 5,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் நிராகரிககப்பட்டன. 5,000 பங்குகளுக்கான விண்ணப்பத் தொகை ஒதுக்கீட்டுக்கு சரிசெய்து கொள்ளப்பட்டது. இதர தொகைகள அனைத்தும் குறிப்பட்ட நேரத்தில் பெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

(அல்லது)

(ஆ) பின்வரும் வியாபாரக் கணக்கிலிருந்து

1. சரக்கிருப்பு விற்பனை விகிதத்தையும்
2. மொத்த இலாப விகிதத்தையும் கணக்கிடுக.

சார்லஸ் நிறுவனத்தின் 2004 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான வியாபாரக் கணக்கு.

| விவரங்கள் | ரூ. | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 40,000 | விற்பனை | 2,00,000 |
| கொள்முதல் | 1,20,000 | இறுதிச் சரக்கிருப்பு | 20,000 |
| தூக்கு கூலி | 10,000 | | |
| மொத்த இலாபம் | 50,000 | | |
| | 2,20,000 | | 2,20,000 |